## 99. சான்றாண்மை

981. *கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து*
*சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு*
**சாதிக்க வேண்டிய கடமைகளை உணர்ந்த**
**சான்றாண்மை கொண்டவர்கள் – அவர்கள்**
**அறிவுக்கு நல்ல காரியம் என்று**
**அறியப்படுகிற காரியங்கள் எல்லாமே**
**அறுதியிட்டுச் செய்ய வேண்டிய கடமை எனக் கொள்வார்கள் !**

982. *குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்*
*எந்நலத் துள்ளதூஉ மன்று*
**சான்றோர்களின் சிறப்பு என்பது – அவர்களைச்**
**சார்ந்த சிறப்பான குண நலமே !**
**சாற்றும் பிற சிறப்புகள் வேறு எதிலும்**
**சான்றான பெருஞ்சிறப்பு அது போல இல்லல !**

983. *அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ*
*டைந்துசால் பூன்றிய தூண்*
**மற்றவர்களிடம் காட்டும் அன்பு**
**மட்டப்படுத்தும் பழிக்கு அஞ்சும் நாணம்**
**மற்றர்வகளுக்கு உதவும் பண்பு**
**மற்ற உயிர்களிடம் காட்டும் இரக்கம்**
**மறைக்காமல் பேசும் வாய்மை – சான்றாண்மை யாவும்**
**மண்டபத்தைத் தாங்கும் ஐந்து போன்றதாம் !**

984. *கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை*
*சொல்லா நலத்தது சால்பு*
**“நோன்பு” என்பது எந்த உயிரையும்**
**நோகாத அழிக்காத அறம் !**
**“சால்பு” என்பது பிறர் தீமையைச்**
**சாடிச் சொல்லாத மேன்மை !**

985. *ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்*
*மாற்றாரை மாற்றும் படை*
**ஆணவமின்றிப் பணிவுடன் இருத்தலே,**
**ஆற்றலாளரின் ஆற்றல் !**
**ஆகவே அந்த அடக்கமே பகைவர்**
**ஆனாலும் பகைமையை மாற்றுகின்ற**
**ஆயுதமாக பயன்படுத்தப்படும் படை !**

986. *சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி*
*துலையல்லார் கண்ணும் கொளல்*

**"சால்பு" என்பது சான்றோரின் குணம்**
**சான்றாண்மைக்கு உரைகல் எதுவெனில்,**
**சிறியவர்களிடத்தில் தோற்றுப் போனாலும்**
**சிறிதும் கவலையற்று கண்ணியமாக ஒத்துக் கொள்வதே !**

987. *இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்*
*என்ன பயத்ததோ சால்பு*

**'இன்னா' எனும் துன்பம் செய்தவனுக்கு**
**இனிய நன்மைதனைத் திரும்பிச் செய்யாவிட்டால்**
**'சால்பு' எனும் "சான்றாண்மை" இருந்தும்**
**சாதிக்கப் போவது தான் என்ன ?**

988. *இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னும்*
*திண்மையுண் டாகப் பெறின்*

**'சால்பு' எனும் சான்றாண்மை பண்பில்**
**சார்ந்து வலிமையான மனஉறுதி கொண்ட**
**வல்லமையுடையவர்க்கு என்றும்**
**"வறுமை" என்பது "இழிவு" அல்ல !**

989. *ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்*
*காழி யெனப்படு வார்*

**ஆழ்ந்த சான்றாண்மைக் குணத்தில்**
**'ஆழி' எனும் கடல் போன்றவர்கள்**
**'ஊழி' எனும் உலகம் முடிவுக் காலம் எனும்**
**ஊறு வந்தாலும் தாழ்ந்து போக மாட்டார்கள் !**

990. *சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலத்தான்*
*தாங்காது மன்னோ பொறை*

**சான்றோர்களின் நற்பண்புகளே சரிவதற்கானச்**
**சான்றுகள் வரத் தொடங்கி விட்டால்**
**"சாந்தை" எனும் "பூமி" பாரம் தாங்காது !**

## 100. பண்புடைமை

***991.*** *எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு*

**எவரிடத்திலும் எளிமையாகப் பழகினால்**
**எப்போதும் இரக்க குணம் பெற்றிருந்தால்**
**எய்தலாம் "பண்புடைமை" எனும் சிறப்பு !**

***992.*** *அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு*

**உள்ளத்தில் அன்புடையவராக இருப்பதும்**
**உயர்ந்த குடியில் பிறந்த இலக்கணத்திற்கு**
**உரியவராக நடந்து கொள்வதும் தான்**
**உயரிய "பண்புடைமை" எனும் நெறி !**

***993.*** *உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க*
*பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு*

**ஒத்திருப்பது உறுப்புகள் என்பதால் – மக்கள் என**
**ஒத்துக் கொண்டதாக ஆகி விடாது !**
**ஒத்திருக்க வேண்டியது எப்போதும்**
**ஒப்பற்ற பண்பு நலன்கள் மற்றவை எல்லாம்**
**ஒப்பும் குண நலன்கள் தான் !**

***994.*** *நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு*

**அறத்யைும் மற்றவர் நலத்தையும் விரும்பி**
**அனைவருக்கும் பயன்பட்டு வாழும்**
**அறிவுடையோரின் பண்பை**
**அகிலமே பாராட்டும் !**

***995.*** *நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்*
*பண்புள பாடறிவார் மாட்டு*

**நகைச்சுவைக்காக கூட ஒருவரை**
**நகைத்து இழிவாகப் பேசினால்**
**நன்மையற்றுக் கேடு தான் விளையும் !**
**பண்புள்ளவர்கள் பகைவரிடத்திலும்**
**பண்பு தவறாமல் பேசுவார்கள் !**

996. *பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்*

**பண்பு "தக்கவர்களிடம்" நன்கு**
**பற்றிப் பொருந்தியிருப்பதாலேயே**
**மண்ணுலகம் அழியாமல் வாழ்கிறது ! – இல்லையேல்**
**மண்ணோடு மண்ணாக மாய்ந்து போயிருக்கும் !**

997. *அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்*
*மக்கட்பண் பில்லா தவர்*

**அரம் போன்று மிகக் கூர்மையான**
**அறிவினை பெற்றவராக இருந்தாலும்**
**"மக்கட் பண்பு" எனும் மனிதப் பண்பு இல்லையெனில்**
**மனமில்லா "மரத்திற்கு" சமமானவரே !**

998. *நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்*
*பண்பாற்றார் ஆதல் கடை*

**நட்புக்கு ஏற்றவராக இல்லாமல்**
**நன்மைதனை செய்யாமல் – தீமை தனையே**
**நன்கு செய்பவர்க்கும் நாம்**
**நற்பண்போடு நன்மை செய்பவராய்**
**நடக்காவிட்டால் நாமே "இழிந்தவர்" ஆகிவிடுவோம் !**

999. *நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்*
*பகலும்பாற் பட்டன் றிருள்*

**யாரோடும் சிரித்துப் பழகி மகிழாதவர்களுக்கு**
**யாங்கணும் இவ்வுலகம் எப்போதும்**
**ஒளி உள்ள பகலிலும்**
**ஒளியற்ற இருளாகவே இருக்கும் !**

1000. *பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்*
*கலந்தீமை யால்திரிந் தற்று*

**நற்பண்பு இல்லாதவன் – வாழ்வில்**
**நயந்து பெற்ற பெருஞ்செல்வம் –**
**நல்ல பால் கொண்ட பாத்திரம்**
**"நவை" எனும் குற்றத்தால் – களங்கத்தால்**
**நலம் திரிந்து விடுவதைப் போன்றதாகும் !**